**செய்தி வெளியீடு எண்: 699** **நாள்: 30.09.2018**

**பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்.**
**நூற்றாண்டு நிறைவு விழா மற்றும்**
**தமிழ்நாடு 50ஆம் ஆண்டு பொன் விழா**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்களின் உரை – 30.9.2018**

அறிவும் அழகும் கலந்த அதிசயமாகவும், கனிவும் கண்டிப்பும் கலந்த ஆளுமையாகவும், கலையும் கவிதையும் நிறைந்த இலக்கியமாகவும், காலமும் நேரமும் சொல்லும் வரலாறாகவும், தொடக்கமும் முடிவும் இல்லாத அண்டமாகவும், உறக்கமும் ஓய்வும் இல்லாத உழைப்பாகவும், தமிழ்நாட்டை இயக்கும் சக்தியாகவும், உலகத் தமிழர்களின் உன்னத தலைவியாகவும், எங்களின் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் தெய்வமாகவும் திகழும் **மாண்புமிகு அம்மா தெய்வத்தை வணங்கி,**

பாரத ரத்னா புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் தமிழ்நாடு 50ஆம் ஆண்டு பொன் விழா என கொண்டாடப்படும் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க விழாவில் உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்த அருமையான நிகழ்ச்சியில், சிறப்பான கருத்துக்களை வழங்கிய அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **ஓ.பன்னீர்செல்வம்** அவர்களே!

தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவர் திரு. **தனபால்** அவர்களே!

இந்த மகத்தான விழாவிற்கு சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு மக்களவை துணைத் தலைவர் டாக்டர் **தம்பிதுரை** அவர்களே!

மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு. **டி.ஜெயக்குமார்** அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே !
மரியாதைக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர்களே!,
மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர்களே!

வரவேற்புரை ஆற்றிய தலைமைச் செயலாளர் முனைவர் **கிரிஜா வைத்தியநாதன்** அவர்களே!

மாண்புமிகு சட்டப் பேரவை துணைத் தலைவர் திரு. **பொள்ளாச்சி ஜெயராமன்** அவர்களே!
அரசு தலைமைக் கொறடா திரு. **எஸ்.ராஜேந்திரன்** அவர்களே!
தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்பு பிரதிநிதி திரு. **என்.தளவாய் சுந்தரம்** அவர்களே!
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் **திருமதி. பா.வளர்மதி** அவர்களே !

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு. **பி.கே.வைரமுத்து** அவர்களே!

நன்றியுரை ஆற்ற உள்ள தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர்
திரு. **இரா.வெங்கடேசன்** அவர்களே!

முன்னாள் அமைச்சர் பெருமக்களே!
முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!
தலைமைக் கழக நிர்வாகிகளே!
கூட்டுறவு சங்க நிர்வாகிகளே,
முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே!

வருகை தந்திருக்கின்ற, இந்த நிகழ்ச்சியை சீறோடும் சிறப்போடும் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவினை சிறப்பு செய்கின்ற விதத்திலே மேடையிலே வீற்றிருக்கின்ற கலைதுறையினரே,

கழகத்தின் பல்வேறு நிலைகளில்
சிறப்பாக பணியாற்றிடும் கழக செயல் வீரர்களே,
கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற
கழகத் தொண்டர்களே!

அரசு உயர் அதிகாரிகளே, அலுவலர்களே,
பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே,
வணக்கத்திற்குரிய பெரியோர்களே, தாய்மார்களே,
இளைஞர்களே! மாணவ மாணவிகளே!
நலத் திட்டப் பயனாளிகளே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா, தமிழ்நாடு முழுவதும் கொண்டாடப்படும் என மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். அவர்களின் அறிவிப்பை செயலாக்கும் விதத்தில், மாண்புமிகு அம்மாவின் அரசு **30.6.2017** அன்று மதுரை

மாநகரில் தொடங்கி, 31 மாவட்டங்களிலும் பாரத ரத்னா புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவை சீரும் சிறப்புமாக கொண்டாடிய அரசு நமது அம்மாவுடைய அரசு என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த விழாக்களில் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மீது கொண்டுள்ள அன்பினை வெளிப்படுத்தும் விதமாக லட்சோபலட்சம் மக்கள் உணர்ச்சிபூர்வமாக கலந்து கொண்டு பெருமை சேர்த்துள்ளனர். இவ்விழாக்களின் மூலம், பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான மக்கள் பயன் பெறும் முத்தான திட்டங்கள் அறிவிக்கப்பட்டு, அரசாணைகள் வழங்கி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

“**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்**”
என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப,

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், இம்மண்ணை விட்டு மறைந்து 30 ஆண்டுகள் ஆனாலும், மக்களின் மனதை விட்டு மறையாமல் இருக்கிறார் என்ற எண்ணத்தை பிரதிபலிக்கும் விதத்தில், இன்று மிகச் சிறப்பாக சென்னையில் புரட்சித் தலைவரின் நூற்றாண்டு நிறைவு விழா கொண்டாடிக் கொண்டிருப்பதை நான் பெருமையாகக் கருதுகிறேன். இந்த விழாவின் மற்றொரு சிறப்பு என்னவென்றால், புரட்சித் தலைவரின் ஆசான் பேறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சியில் இருந்தபோது, 1968ஆம் ஆண்டு தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்து இந்த ஆண்டோடு 50 ஆண்டு காலம் ஆகிறது.

இந்த 50 ஆண்டு கால பொன் விழாவின் மூலம் தமிழர்களின் பெருமையை பறைசாற்றும் வகையில், கலை, விளையாட்டு, கட்டுரை, கவிதை, பேச்சுப் போட்டி போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் மாநிலம் முழுவதும் நடத்தப்படும் என சட்டப் பேரவையில் நான் அறிவித்தேன்.

அதன்படி பல்வேறு போட்டிகள் மாவட்ட வாரியாக நடத்தப்பட்டு, மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன. அதேபோல் மாநில அளவில் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு, முதல் மூன்று இடங்களைப் பெற்ற வெற்றியாளர்கள் 36 பேர்களுக்கு இன்று இக்கூட்டத்தில் பரிசுகள் வழங்கப்பட உள்ளன. அது தவிர, இளந்தமிழ் ஆய்வாளர்களாக தெரிவு செய்யப்பட்ட 50 நபர்களுக்கு ரொக்கப் பரிசும், பாராட்டுச் சான்றிதழ்களும் இன்று வழங்கப்பட உள்ளன என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, மாவட்டம் தோறும் புரட்சித் தலைவரின் வரலாற்று சாதனைகளை மாணவ, மாணவிகள் அறிந்திடும் வகையில், பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டி, பல விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பட்டிமன்றங்கள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

அத்துடன் புரட்சித் தலைவரின் சிறப்பினை போற்றிடும் வகையில் கலை நிகழ்ச்சிகள் மற்றும் கிராமிய நடனங்களும் நடைபெற்றன. இது தவிர, ஒவ்வொரு மாவட்டத்திலும், அரசின் திட்டங்களை மக்கள் அறிந்து பயன் பெறும் வகையில், அனைத்துத் துறைகளின் சார்பில், கண்காட்சிகளும் நடத்தப்பட்டன.

**380 வயதுடைய சென்னை, தன் செல்ல மகன் புரட்சித் தலைவரின் நூற்றாண்டு விழாவை, தமிழ்நாடு என பெயர் மாற்றம் செய்யப்பட்டதன் பொன்விழா ஆண்டுடன் இணைந்து இன்று கொண்டாடிக் கொண்டிருக்கிறது.**

புரட்சித் தலைவரின் வாழ்க்கை வரலாறு எத்தனை சுவை மிகுந்ததோ, அதே அளவிற்கு சென்னையின் வளர்ச்சியும், வரலாறும் சுவை மிக்கது.

**380** ஆண்டுகளுக்கு முன்பு இங்கு வங்கக் கடலோரம் இருந்த மைலாப்பூர், திருவல்லிக்கேணி, திருவான்மியூர், திருவொற்றியூர் போன்ற சிறு குறு கிராமங்களை உள்ளடக்கி இருந்த மதராஸப் பட்டினம்தான், சென்னைப் பட்டினமாக மாறி, இப்போது சென்னையாகி, தமிழ்நாட்டின் தலைநகராக விளங்கி வருகிறது. **1653** ஆம் ஆண்டு சென்னைப் பட்டினம் – சென்னை மாகாணமாக மாறியது. **சென்னை நகரம், சென்னை பெருநகரமாகி** பிறகு **சென்னை மாநகராட்சியாகி,** இப்போது **பெருநகர சென்னை மாநகராட்சியாக** வளர்ந்து, **426 சதுர கிலோ மீட்டர்** சுற்றளவுக்கு **விரிவடைந்துள்ளது.** 1688 ஆம் ஆண்டு சென்னை தான் முதல் மாநகராட்சியாக உதயமானது. இந்தியாவில் முதல் இருப்புப் பாதை **1856 ஆம் ஆண்டு** சென்னை ராயபுரத்தில் தான் அமைந்தது.

**1823** ஆம் ஆண்டு சென்னையின் பெயரைத் தாங்கி வந்த **“மதராஸ் மெயில்”**தான் முதல் நாளிதழாக விளங்கியது.

இந்தியாவிலேயே முதன்முதலில் ஒளிபரப்பு நிலையம் அமைக்கப்பட்டது சென்னையில் தான்.

**150** அடி உயரம் கொண்ட **மிக உயரமான கொடிமரம்** நமது **புனித ஜார்ஜ் கோட்டையில்** தான் உள்ளது.

சுமார் **13** கி.மீ. நீளமுள்ள சென்னை மெரினா கடற்கரைதான், உலகில் இரண்டாவது மிக நீளமான கடற்கரையாக திகழ்கிறது.

தென்னக மாநிலங்களின் படப்பிடிப்பு மையமாக கோடம்பாக்கம் விளங்குவதால், இதை **"கோலிவுட்"** என்கிறார்கள்.

மிகப்பெரிய வர்த்தக துறைமுகமான சென்னை துறைமுகத்தில் ஆண்டுக்கு 5.2 கோடி டன் சரக்கு கையாளப்பட்டு வருகிறது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், தென்னிந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் கல்லூரி என்ற பெருமை பெற்ற **மாநிலக் கல்லூரியும்**, அதன் பின்னர், 1857 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட **சென்னை பல்கலைக்கழகமும்** மிகப்பழமையான கல்வி நிறுவனங்களாக கருதப்படுகிறது.

சென்னை ஓர் சிறந்த உயர் கல்வி மையம் மட்டுமல்ல; இந்தியாவின் முக்கிய தொழில் மையங்களில் ஒன்றாகவும் திகழ்கிறது.

2015–ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களால் சென்னையில் நடத்தப்பெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில், மிக அதிக அளவிலான முதலீடுகள் கவரப் பெற்றன என்பதை நான் மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

இதற்கு முக்கியக் காரணம், கடந்த ஏழு ஆண்டுகளில் விரிவான திட்டங்கள் மூலமாக மாண்புமிகு அம்மா அவர்களும், தொடர்ந்து மாண்புமிகு அம்மாவின் அரசும், தமிழகத்தை மின்மிகை மாநிலமாக மாற்றிக் காட்டியது தான். மேலும், எதிர்காலத் தேவையை கருத்தில் கொண்டு, 11,400 மெ.வா. மின் உற்பத்தி திட்டங்களுக்கான ஆரம்பக் கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு அம்மாவின் அரசு சென்னையில் **உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019ஐ** நடத்த முடிவு செய்து, பல்வேறு முன்னேற்பாடுகளை துரிதமாக எடுத்து வருகிறது. இம்முயற்சிகளால் கண்டிப்பாக பல சர்வேதேச நிறுவனங்கள் சென்னையில் தொழில் முதலீடுகள் செய்ய முன்வருவார்கள் என உறுதியாக நம்புகிறேன். இதன் மூலம், தமிழ்நாட்டில், குறிப்பாக சென்னையில் தொழில் வளம் மேலும் பெருகும் என்பது உறுதி.

தகவல் தொழில்நுட்பம் சார்ந்த நிறுவனங்கள், பிற சேவைத் துறைகளான உணவு, மருத்துவ சேவை, அழைப்பு மையங்கள் (BPO) ஆகியவற்றின் முக்கிய இடமாக சென்னை விளங்குவதால், தமிழ்நாடு மட்டுமல்லாமல், இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் இளைஞர்கள் வேலைவாய்ப்பைப் பெறுவதற்காக இங்கு நாளுக்கு நாள் குவிந்து வருகிறார்கள். அனைவருக்கும் வேலையையும், வாழ்வையும் தந்து வருகிறது சென்னை. **இந்தியாவிலேயே பெண்கள் பாதுகாப்பாக வாழக்கூடிய மெட்ரோ நகரங்களில் சென்னை முதலிடம் பிடித்திருக்கிறது.**

பெண்கள் பாதுகாப்பு மட்டுமன்றி, தொழில் பாதுகாப்பு, தொழில் வளர்ச்சிக்கான சூழல், தொழில் முன்னேற்றத்திற்கான அரசு உதவிகள், இரண்டு துறைமுகங்கள், பன்னாட்டு மற்றும் உள்நாட்டு விமான நிலையங்கள் மற்றும் மிதமான தட்பவெட்ப நிலை கொண்ட மாவட்டமாக சென்னை விளங்குவதால் உலக முதலீட்டாளர்கள் தொழில் தொடங்க சென்னைக்குத் தான் முதலிடம் கொடுக்கிறார்கள்.

நம் இருபெரும் தலைவர்களை பெருமைப்படுத்தும் விதத்தில், 2 கோடியே 52 லட்சம் ரூபாய் செலவில் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு நினைவு வளைவு மற்றும் 50 கோடி ரூபாய் செலவில் மாண்புமிகு அம்மா அவர்களின் நினைவிடம் அமைக்கும் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திற்கு **"புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ராமச்சந்திரன் மத்திய இரயில் நிலையம்"** என்று பெயர் சூட்ட மத்திய அரசுக்கு மாண்புமிகு அம்மாவின் அரசு பரிந்துரை செய்துள்ளது என்பதை இவ்விழாவில் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்று சொன்னால், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா, சீரோடும் சிறப்போடும் தமிழ்நாட்டில் கொண்டாடிக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திற்கு பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயர் சூட்ட வேண்டும் என்று மத்திய அரசிடம் வேண்டுகோள் வைத்திருக்கிறோம்.

மேலும் தமிழக மக்கள் அனைவரின் அன்பைப் பெற்ற அறிஞர் அண்ணா, மற்றும் புரட்சித்தலைவி அம்மா ஆகியோருக்கு நாட்டின் உயரிய விருதான பாரத ரத்னா விருது வழங்க மத்திய அரசுக்கு மாண்புமிகு அம்மாவின் அரசு கோரிக்கை விடுத்துள்ளது என்பதை இங்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் தலைநகராக இருப்பதால் பல தலைவர்களையும், அறிஞர்களையும், கலைஞர்களையும், பல அரசியல் நிகழ்வுகளையும் கண்டது சென்னை. பலருடைய சாதனைகளின் களமாக இருப்பதும் சென்னையாகும்.

சென்னைக்கு பல அடையாளங்கள் இருந்தாலும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். என்கிற ஒரு அடையாளம்தான் உலகளவில் சென்னைக்கு மட்டுமல்லாமல் தமிழ்நாட்டுக்கே தனி செல்வாக்கை ஏற்படுத்தியது என்பதை மகிழ்ச்சியுடன் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் மக்கள் தலைநிமிர்ந்து நிற்க காரணமாக இருந்த தலைவர்களில் மிகவும் முக்கியமானவராகத் திகழ்ந்தவர் புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்கள். அரசியல் களத்திலிருந்து வந்தவர்களை மட்டும் முதலமைச்சராக ஏற்றுக் கொண்டிருந்த தமிழ்நாடு, கலை உலகத்திலிருந்து வந்த ஒரு நடிகரை முதன்முதலில்

முதலமைச்சராக ஏற்றுக்கொண்டது நமது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைத்தான் என்பதை இந்த நேரத்தில் கோடிட்டு காட்ட விரும்புகின்றேன்.

அதற்குக் காரணம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மீது தமிழ்நாட்டு மக்கள் கொண்டிருந்த பேரன்பும், நம்பிக்கையும், – திரையிலும், பொது வாழ்விலும் மக்கள் நாயகனாக அவர் வாழ்ந்ததும் தான்.

எம்.ஜி. ராமச்சந்திரன் – **எம்.ஜி.ஆராகி,** அதன்பிறகு நாடக நடிகராகி, திரைப்படங்களில் தன் புரட்சி நடிப்பாலும், வள்ளல் குணத்தாலும், மக்களைக் கவர்ந்து புரட்சித் தலைவராக உயர்ந்து, நடிப்பால் ஈட்டிய செல்வத்தை இல்லாதவர்களுக்கு அள்ளி அள்ளிக் கொடுத்து, மக்கள் திலகமாக வளர்ந்து, தமிழ்த் தாயின் திருமுகத்தில் நெற்றித் திலகமாக மாறி.. தமிழ்நாட்டின் தலையெழுத்தையே மாற்றியமைத்தவர்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக 1977 முதல் 1987 ஆம் ஆண்டு வரை கோட்டையில் வீற்றிருந்து கோலோச்சினார்.

தமிழ்த்தாய் தத்து எடுத்துக் கொண்ட தமிழர்களின் தவப்புதல்வன் எம்.ஜி.ஆர். அவர்களின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்திருப்பதுதான் சென்னையின் வரலாறும், முன்னேற்றமும் என்பதால், பாரத ரத்னா புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை சென்னையில் நடத்துவது என்பதுதான் மிகவும் பொருத்தமாகும்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தனது ஆட்சிக் காலத்தில் கொடுத்த சில திட்டங்களைக் குறிப்பிட நான் கடமைப்பட்டுள்ளேன்.

தனது இளம் வயதில் வறுமை மற்றும் பசியின் கொடுமையை உணர்ந்த காரணத்தால், பள்ளி மாணவர்களுக்கு சத்துணவுத் திட்டம் வழங்கினார். தற்போது இந்த மகத்தான திட்டத்தில் 51 லட்சம் மாணாக்கர்கள் தினமும் பயனடைந்து வருகின்றனர். இந்த திட்டத்தை மத்திய அரசும் தமிழ்நாட்டைப் பின்பற்றி இந்தியா முழுவதும் நடைமுறைப்படுத்தியுள்ளது. இந்த திட்டம் சரித்திரம் வாய்ந்த திட்டம் என்பதை இன்றைக்கு நாடு போற்றிக் கொண்டிருக்கிறது.

போதிய வருவாய் இல்லாத சிறு கோயில்களுக்கு **ஒரு கால பூஜைக்கு** வழி வகை செய்யும் புதிய திட்டம் கொண்டு வந்தார்.

சென்னை மக்களின் தாகத்தைத் தீர்க்க **கிருஷ்ணா நதிநீர்த் திட்டம்** நடைமுறை படுத்தி காட்டியவர் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

**1981ல் உலகத் தமிழ் மாநாடு** நடத்தினார். **தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகம், உலகத் தமிழ்ச் சங்கம்** ஏற்படுத்தினார்.

கடவுள் என்னும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி – விவசாயி
என்று பாடியவர், பாட்டோடு நிறுத்திக் கொள்ளாமல், முதன் முதலாக தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன், **330 கோடி ரூபாய் விவசாயக் கடன்களை** தள்ளுபடி செய்தார். அது மட்டுமல்ல, **3.30** லட்சம் **பம்ப்–செட்டுகளுக்கு** மின் இணைப்பு வழங்கி, பயிர் பாதுகாப்பு காப்பீடு முறையைக் கொண்டு வந்தவர் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

**அனைத்து குடிசை வீடுகளுக்கும்** மின் விளக்கு வசதியை ஏற்படுத்தினார்.

இறப்பைக் கூட வெற்றி கண்டு, கோடிக் கணக்கான உள்ளங்களில் இன்றும் உயிருடன் வாழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், தான் வாழ்ந்த ராமாவரம் தோட்டத்தைக் கூட வாய் பேசாத, காது கேளாத, கண்பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்காக வழங்கினார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் உயிருடன் இருந்த போதும் ஏழை எளியவருக்கு வாரி வழங்கும் வள்ளலாக இருந்தார். இறந்த போதும் தனது சொத்துக்களை மாற்று திறனாளிகளுக்காகவும், கல்விக்காகவும் எழுதி வைத்த தன்னலமற்ற தலைவர். ஒரு தலைவர் எப்படி உண்மையான தலைவனாக, தன்னலமற்று இருக்க வேண்டும் என்று வாழ்ந்து காட்டியவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவினை சிறப்பிக்கும் வகையில் அவரது அஞ்சல் தலை வெளியிடப்பட்டுள்ளது. அவரது உருவம் பொறித்த நாணயமும் வெளியிடப்பட உள்ளது.

**'புரட்சித் தலைவர்'** என்ற ஒரு மாபெரும் சக்தி தமிழ்நாட்டில் தோன்றியிருக்காவிட்டால், தமிழ்நாட்டின் நிலைமை **நிர்கதி** ஆகியிருக்கும்.

திரு. எம்.ஜி.ஆர். அவர்கள், புரட்சி நடிகராக இருந்தபோது அவரை உயிரென நினைத்த ரசிகர்கள், அவர் புரட்சித் தலைவர் அவதாரம் எடுத்த பிறகு, தொண்டர்களாக மாறினார்கள். புரட்சித் தலைவர் முதலமைச்சராக அவதாரம் எடுத்தபோது தொண்டர்கள் பக்தர்களாகவே மாறினார்கள்.

தொண்டர்களின் இன்பத்திலும், துன்பத்திலும் பங்கெடுத்துக் கொண்ட **மாபெரும் மக்கள் தலைவராக** புரட்சித் தலைவர் திகழ்ந்ததால் தான், இன்றைக்கும், யாராலும் அசைக்க முடியாத **எஃகு கோட்டையாக அஇஅதிமுக நிலைத்து நிற்கிறது.**

இந்தியாவில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு ரசிகர்கள் இருந்தார்கள் என்றால், அத்தனை ரசிகர்களையும் அவர் திருப்திப்படுத்தினார்.

சில நேரங்களில் தன்னையும் வருத்திக் கொண்டு ரசிகர்களை மகிழ்ச்சியடையச் செய்திருக்கிறார். எண்ணற்ற தொண்டர்களின் தியாகமும், உழைப்பும் இந்த **அஇஅதிமுக** என்ற ஆலமரத்திற்கு உரமாக போடப்பட்டிருக்கிறது.

**1977**ஆம் ஆண்டு அஇஅதிமுக ஆட்சியை அமைக்கும் வரை, கழகத்தினர் தங்கள் உயிரை கையில் பிடித்துக் கொண்டு தான் வாழ வேண்டியதாயிற்று. அப்படிப்பட்டவர்கள் தான், இந்த மாபெரும் இயக்கத்தை வளர்த்திருக்கிறார்கள். **அவர்களை எல்லாம் நாம் இந்த நேரத்தில் நினைத்துப் பார்த்து மரியாதை செலுத்த வேண்டும்.**

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் எண்ணங்களை வெற்றியடையச் செய்த அந்த வீரம் மிக்க இளைஞர்கள் மறைந்து விடவில்லை, அவர்கள் வாழையடி வாழையாக இன்றைக்கும் கழகத்தில் மக்கள் பணியாற்றி வருகிறார்கள். **நான் உட்பட இங்கே அமர்ந்திருக்கின்ற அனைவரும் அப்படி வந்தவர்கள் தான்.**

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் உடல் அளவில் மறைந்த **1987**ஆம் ஆண்டு டிசம்பர் **24**ஆம் நாள் வரை எதிர்க்கட்சிகளால் ஆட்சிப் பொறுப்பை நினைத்துக்கூட பார்க்க முடியாத அளவிற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மக்கள் செல்வாக்கை பெற்றிருந்தார்கள்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் திரைப்படத்தைப் போல் அவருடைய கட்சியும் **100 நாட்கள் தான் ஓடும்** என்று கேலியும், கிண்டலும் பேசியவர்கள், புரட்சித் தலைவர் உயிரோடு இருக்கிற வரையில் **கோட்டை பக்கம் திரும்பவே முடியவில்லை?**

**மாண்புமிகு புரட்சித் தலைவருக்குப் பிறகு, அஇஅதிமுக கட்சி முடிந்துவிட்டது என்று மீண்டும் கொக்கரித்தார்கள்.** அவமானங்களை மலர் மாலையாக சூட்டிக் கொண்டு **அஇஅதிமுக–வை ஒரு பீனிக்ஸ் பறவையைப் போல வெற்றி வானில் பறக்க விட்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசியலில் விஸ்வரூபம் எடுப்பார் என்று எதிர்க்கட்சிகள் எதிர்பார்க்கவில்லை.** மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கழகத்திற்கு தலைமையேற்று கழகத்தை இன்னும் வீறு கொண்டு வளரச் செய்தார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின் செய்த சில சாதனைகளை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

உயர் கல்வித் துறையில் புதிதாக 65 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை மாண்புமிகு அம்மா அவர்கள் தொடங்கினார்கள். அதன்பின் மாண்புமிகு அம்மாவின் அரசு கடந்த ஆண்டு 11 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை துவக்கியுள்ளது. இதன் விளைவாக, மாண்புமிகு அம்மா அவர்கள் 2011ல் ஆட்சி பொறுப்பேற்ற பொழுது உயர்கல்வியில் 21 சதவீதமாக இருந்த மாணவர் சேர்க்கை இன்று 48.6 சதவீதமாக உயர்ந்து, இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக முன்னேறியுள்ளது என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை மக்களின் தாகம் தணிக்க புரட்சித் தலைவர் கொண்டு வந்த **கிருஷ்ணா நதிநீர் திட்டத்தைப் போல, மாண்புமிகு அம்மா அவர்கள் புதிய வீராணம்** திட்டத்தை கொண்டு வந்தார்கள்.

சென்னை மாநகர மக்களின் குடிநீர் பிரச்சனையை நிரந்தரமாகத் தீர்க்க மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த **நெம்மேலியில்** 1,259 கோடி ரூபாய் செலவில் 150 மில்லியன் லிட்டர் கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்திற்கு ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கும் நிலையில் உள்ளது.

6 ஆயிரத்து 78 கோடி ரூபாய் செலவில் பேரூரில், நாள் ஒன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் கடல்நீரை, குடிநீராக்கும் திட்டத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோர ஆயத்தப்பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது.

திருவள்ளூர் மாவட்டம், கண்ணன்கோட்டை கிராமத்தில், கண்ணன்கோட்டை இசா இராஜநேரி மற்றும் தேர்வாய் கண்டிகை ஏரிகளை இணைத்து சென்னை மாநகரின் குடிநீர் தேவைக்காக ஒரு புதிய நீர்த்தேக்கம் அமைக்கும் பணி 330 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முன்னேற்றத்தில் உள்ளது. மேற்கண்ட இந்த 3 திட்டங்களினால், சென்னையின் குடிநீர் பிரச்சனை பெருமளவில் தீர்க்கப்படும் என்பதில் ஐயமில்லை.

நடப்பாண்டில், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் ஏரிகள், கால்வாய்கள் மற்றும் நீர்நிலைகளில் 28 முன்னெச்சரிக்கை பணிகள் 6 கோடி ரூபாய் செலவில் துவங்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன.
சென்னையில் 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நிரந்தர வெள்ளத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

ஒருங்கிணைந்த சென்னை மற்றும் புறநகர் மாவட்டங்களில் உள்ள அடையாறு, கொசஸ்தலையாறு, கூவம் ஆரணியாறு மற்றும் கோவளம் வடிநிலங்கள் மற்றும் பங்கிங்காம் கால்வாயில், பொதுப் பணித் துறை மூலமாக நிரந்தர வெள்ள தடுப்புப் பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கை 2 ஆயிரத்து 790 கோடி ரூபாய் மதிப்பில் தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

கோவளம் வடிநிலப் பகுதியில் 1,243 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 326 கி.மீ. நீளத்திற்கும்,

2,518 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கொசஸ்தலையாறு வடிநிலப் பகுதியில் 765 கி.மீ. நீளத்திற்கும், ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்க திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, பல்வேறு நிலைகளில் பணிகள் உள்ளன.

சென்னை மாநகராட்சி பகுதிகளில் மழைநீர் தேங்குவதை முற்றிலும் தவிர்க்கும் பொருட்டு, சுவிட்சர்லாந்து, பின்லாந்து போன்ற வெளி நாடுகளிலிருந்து 24 கோடி ரூபாய் மதிப்பில் பல்வேறு நவீன இயந்திரங்கள் வாங்கப்பட்டு, நீர்வழி கால்வாய்களில் தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இப்பணிகள் முடிவடையும்போது, சென்னை மற்றும் புறநகர் பகுதியின் தாழ்வான பகுதிகளில் வெள்ள நீர் புகாமல் தடுக்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்கள் சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் 2011–ஐ அறிவித்து, விரிவாக்கப்பட்ட மாநகராட்சி பகுதிகளில் சென்னைக்கு நிகரான உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த ஆயிரத்து 488 கோடி ரூபாய் சென்னை மாநகராட்சிக்கு வழங்கினார்கள்.

இதன் மூலம் உட்புறச்சாலைகள், மழைநீர் வடிகால்வாய், நடைபாதைகள், எல்.ஈ.டி தெரு விளக்குகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

நடப்பாண்டில், 298 கோடி ரூபாய் செலவில் 624 கி.மீ. மொத்த நீளத்திற்கு 3 ஆயிரத்து 823 சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

சென்னை பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பை பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வாக விஞ்ஞான ரீதியான குப்பை கொட்டும் வளாகமும், குப்பையிலிருந்து 30 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கவும் திட்ட அறிக்கை ஒன்று அண்ணா பல்கலைக் கழகம், ஐ.ஐ.டி. கல்வி நிறுவனம், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் உள்ளடக்கிய குழுவின் மூலம் பல்வேறு நிலைகளில் பரிசீலனை செய்யப்பட்டு, இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

சீர்மிகு நகர (Smart City) திட்டத்தின் கீழ் சென்னை மாநகராட்சியில் மொத்தம் 953 கோடி ரூபாய் மதிப்பீட்டில், நடைபாதை வளாகம், பன்னடுக்கு வாகன நிறுத்தம், வாகன நிறுத்த மேலாண்மை திட்டம், மிதிவண்டி பகிர்மான சேவை, மேம்பாலம் அமைத்தல், மழைநீர் வடிகால் இணைத்தல், ஏரி புனரமைத்தல், எல்.ஈ.டி. விளக்குகள் அமைத்தல் போன்ற 37 திட்டப் பணிகள் எடுக்கப்பட்டு, அவற்றில் 15.60 கோடி ரூபாயில் 5 பணிகள் முடிக்கப்பட்டும், 345 கோடி ரூபாயில் 18 திட்டங்கள்

செயலாக்கத்திலும் உள்ளன. மீதமுள்ள 14 திட்டப் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

அம்ருத் திட்டத்தின் கீழ், பெருநகர சென்னை மாநகராட்சியில் 51 பூங்காக்கள் 35 கோடி ரூபாய் செலவில் அமைக்க திட்டமிடப்பட்டு, 30 பணிகள் முடிக்கப்பட்டும், 21 பணிகள் நடைபெற்றும் வருகின்றன.

**நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் கடந்த 7 ஆண்டுகளில்,**

- 470 கோடி ரூபாய் மதிப்பில் 6 ஆற்றுப் பாலங்களும், 5 சாலை மேம்பாலங்களும், 3 ரயில்வே மேம்பாலங்களும் மற்றும் 5 இடங்களில் நகரும் படிக்கட்டுகளுடன் நடை மேம்பாலங்களும் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

- தற்போது 745 கோடி ரூபாய் மதிப்பில் 6 இடங்களில் சாலை மேம்பாலங்களும், ஒரு ரயில்வே மேம்பாலமும், பக்கிங்காம் கால்வாயில் ஒரு உயர்மட்ட மேம்பாலமும் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 154 கோடி ரூபாய் மதிப்பிலான 27 கி.மீ. நீளத்திற்கு சாலை மற்றும் வடிகால் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- சென்னை துறைமுகம் முதல் மதுரவாயல் வரை உயர்மட்டச் சாலை அமைக்கும் பணிக்கான திருத்திய விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி முடியும் நிலையில் உள்ளது. விரைவில் பணிகள் துவங்கப்படும்.

- சென்னை எண்ணூர் துறைமுகத்தை, தச்சூர், திருவள்ளூர், திருப்பெரும்புதூர் மற்றும் சிங்கப்பெருமாள் கோயில் வழியாக மாமல்லபுரத்துடன் இணைக்கும் 134 கி.மீ. நீள சுற்றுச்சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

- சாலைப் பணிகளுக்கான நில எடுப்புப் பணிகள் 3 ஆயிரத்து 554 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- கிரீன்வேஸ் சாலை மற்றும் துர்காபாய் தேஷ்முக் சாலைகளை தமிழ்நாடு இசைக் கல்லூரி வழியாக இணைக்கும் வகையில் 650 மீட்டர் நீளத்திற்கு 30 கோடி ரூபாய் மதிப்பில் இணைப்புச் சாலை அமைக்கப்படும்.

மேற்சொன்ன திட்டங்களால், சென்னை நகரில் போக்குவரத்து நெரிசல் பெருமளவில் குறைக்கப்பட்டு, சீரான மற்றும் விரைவான போக்குவரத்திற்கு வழிவகை செய்யப்படும்.

சென்னை மீன்பிடி துறைமுகத்தில் ஆழ்கடல் மீன்களை கையாள்வதற்கு ஏற்ற வகையில் தரமான உட்கட்டமைப்பு வசதிகளுடன் **சூரை மீன்பிடி துறைமுகம்** 200 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு வருகிறது.

காசிமேடு மீன்பிடி துறைமுகம் 100 கோடி ரூபாய்க்கும் அதிகமான செலவில் புனரமைக்கப்பட்டு மாண்புமிகு அம்மா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

சென்னை உட்பட நகர் ஊரமைப்புத் துறை பகுதிகளில் வசிக்கும் ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில், 2016க்குப் பின்னர் ஏற்படுத்தப்பட்ட அனுமதியற்ற மனைப்பிரிவு மற்றும் மனைகளை வரன்முறைப்படுத்த புதிதாக ஒரு திட்டம் மாண்புமிகு அம்மாவின் அரசால் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது. இதன் மூலம் சுமார் ஒரு லட்சத்து 40 ஆயிரம் குடும்பங்கள் பயன் பெற்றுள்ளனர்.

சென்னை கோயம்பேடு பேருந்து முனையத்தில் போக்குவரத்து நெரிசலை குறைத்திடவும், சென்னையிலிருந்து வடக்கு நோக்கி செல்லும் பேருந்துகளுக்காக மாதவரத்தில் 95 கோடி ரூபாய் செலவில் ஒரு பேருந்து முனையம் கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்பட உள்ளது.

இது தமிழ்நாட்டிலேயே முதன்முதலாக கட்டப்பட்ட இரண்டடுக்கு பேருந்து முனையமாகும்.

இது தவிர, தெற்கு நோக்கிச் செல்லும் பேருந்துகளுக்காக கிளாம்பாக்கத்தில் சுமார் 417 கோடி ரூபாய் செலவில் ஒரே நேரத்தில் 250 பேருந்துகள் நிறுத்தக்கூடிய அளவிலான, துணை மின் நிலையம் உட்பட அனைத்து வசதிகளுடன் கூடிய பேருந்து நிலையம் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கட்டுமானப் பணிகள் விரைவில் துவக்கப்பட உள்ளன.

சென்னை மெட்ரோ ரயில் சேவையின் இரண்டாம் கட்டப் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன. இதன்படி **மாதவரம் முதல் சிறுசேரி வரையில் ஒரு வழித்தடமும், சென்னை புறநகர் பேருந்து நிலையம் முதல் கலங்கரை விளக்கம் வரையிலான ஒரு வழித்தடமும், மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரை ஒரு வழித்தடமும்** என மொத்தம் **107.55 கி.மீ. நீளத்திற்கான 3 வழித்தடங்கள்** 79 ஆயிரத்து 961 கோடி ரூபாய் மதிப்பில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளன.

பெருகிவரும் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக உட்கட்டமைப்பை வலுப்படுத்தும் நோக்கில், சென்னை விமான நிலையத்தை விரிவாக்கம் செய்ய, மத்திய அரசின்

ஒப்புதல் பெறப்பட்டு, முதற்கட்டப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். குடியிருப்பு மற்றும் வணிகத் திட்டங்களில் வாங்குபவர்களுக்கும், மேம்பாட்டாளர்களுக்கும் இடையே உள்ள விற்றல்–வாங்கல் நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்காக, நிரந்தர கட்டட, மனை விற்பனை மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தை நிறுவிய முதல் மாநிலம் தமிழ்நாடு தான்.

கடந்த 7 ஆண்டுகளில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் மொத்தம் 6 ஆயிரத்து 135 குடியிருப்புகள், 2 ஆயிரத்து 18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு, பயன்பாட்டில் உள்ளன.

இது தவிர, தற்போது 5,998 அலகு எண்ணிக்கையில் 1,591 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு திட்டங்கள் பெருநகர சென்னை மாநகராட்சி பகுதியில் நடைபெற்று வருகின்றன. மேலும், 12 ஆயிரத்து 308 வீடுகள், 3,408 கோடி ரூபாய் செலவில் கட்டுவதற்கான திட்டங்கள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

குடிசைப் பகுதிகளற்ற சென்னையை உருவாக்கும் நோக்கில், சென்னையில் கடந்த 7 ஆண்டுகளில் 46 ஆயிரத்து 641 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. நடப்பாண்டில் 934 குடியிருப்புகள் கட்டப்பட்டு தயார் நிலையிலும், 18 ஆயிரத்து 67 குடியிருப்புகளுக்கான பணிகள் முன்னேற்றத்திலும் உள்ளன.

பொது மக்கள் அரசின் பல்வேறு சேவைகளை அலைச்சல் இன்றி பெறுவதற்கு வசதியாக, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் இருந்த சில வருவாய் கிராமங்களை சென்னை மாநகராட்சி எல்லைக்கு இணையாக விரிவாக்கம் செய்யப்பட்ட சென்னை வருவாய் மாவட்டம் உருவாக்கப்பட்டு, 4.1.2018 அன்று நான் துவக்கி வைத்துள்ளேன்.

சென்னையில் ஏழை, எளிய மக்கள் பசியோடு இருக்கக்கூடாது என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் உயரிய சிந்தனையின் விளைவாக, சென்னை முழுவதும் பல்வேறு இடங்களில் அம்மா உணவகங்கள் இயங்கி வருகின்றன.

கடந்த 7 ஆண்டுகளில், மகளிர் திருமண உதவித் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 10 லட்சத்து 21 ஆயிரத்து 499 பயனாளிகளுக்கு 4,704 கோடி ரூபாய் அளவிற்கும், சென்னையில் மட்டும் 28 ஆயிரத்து 664 பயனாளிகளுக்கு 149 கோடி ரூபாய் அளவிற்கு நிதி உதவி மற்றும் தாலிக்குத் தங்கமும் வழங்கப்பட்டுள்ளது.

விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 5,532 கோடி ரூபாய் மதிப்பில் 37 லட்சத்து 72 ஆயிரம் மாணாக்கர்களுக்கும், சென்னையில் மட்டும் ஒரு லட்சத்து 53 ஆயிரம் மாணாக்கர்களுக்கும் மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் 47 லட்சத்து 82 ஆயிரம் தாய்மார்களுக்கு, 4,401 கோடி ரூபாய் நிதி உதவியும், சென்னையில் மட்டும் 2 லட்சத்து 97 ஆயிரம் தாய்மார்களுக்கு 278 கோடி ரூபாய் நிதி உதவியும் வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் 25 லட்சத்து 8 ஆயிரம் பயனாளிகளுக்கு 4,757 கோடி ரூபாய் அளவிற்கும், சென்னையில் மட்டும் ஒரு லட்சத்து 96 ஆயிரம் பயனாளிகளுக்கு 328 கோடி ரூபாய் அளவிற்கும் மருத்துவ உதவி வழங்கப்பட்டுள்ளது.

நம் இயக்கத்தின் இருபெரும் தலைவர்களும் முதலமைச்சர் பதவியை கிரீடமாக சூட்டிக் கொள்ளவில்லை. பதவியை ஒரு மக்கள் கட்டளையாக ஏற்று உழைத்தவர்கள். இந்தத் தமிழ் மண்ணில் பேரறிஞர் அண்ணாவின் பெயரில் புரட்சித் தலைவர் அவர்கள் விதைத்த அஇஅதிமுக என்கிற விதையானது, இன்னும் நூற்றுக்கணக்கான ஆண்டுகள் ஆனாலும், யாராலும் அசைக்க முடியாத சக்தியாக வளர்ந்திருக்கிறது. அஇஅதிமுக மக்களுக்காக உருவான கட்சி. மக்களுக்காகவே தியாகம் செய்யும் கட்சி. அஇஅதிமுக இத்தனை வலிமையாக இருப்பதற்குக் காரணம்,

“**ஒரு தாய் மக்கள் நாமென்போம்,**
**ஒன்றே எங்கள் குலமென்போம்**” என்று ஒற்றுமையை வலியுறுத்திய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தான் காரணம்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு நடிகருக்கும் ரசிகர்களுக்குமான இடைவெளியை எப்படி குறைத்துக் காட்டினாரோ –

அப்படித்தான் ஒரு அரசியல் தலைவருக்கும், தொண்டனுக்குமான இடைவெளியை மட்டுமல்லாமல், ஒரு ஆட்சியாளருக்கும் பொது மக்களுக்குமான இடைவெளியையும் குறைத்துக் காட்டினார்.

அதனால் தான் ஒரு முறை புரட்சித் தலைவர் அவர்கள்,
“**நான் நினைத்திருந்தால், கோடிக் கணக்கில் பணம் சேர்த்திருக்கலாம், பணத்தை சேர்க்கவில்லை. ஆனால் கோடிக்கணக்கான இதயங்களை சேர்த்துக் கொண்டிருக்கிறேன்**” என்று உருக்கமாக பேசினார்கள்.

தான் அரசியலில் சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் உதயமாவதற்கு முன்பே, மக்களிடமிருந்து எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் ஏழைகளுக்கும், தொழிலாளர்களுக்கும் ஓடி ஓடி உதவி செய்தவர் நமது பொன்மனச் செம்மல் அவர்கள். அதனால் தான்,
“**வாத்தியாரு பாடி வச்ச பாட்டு,**
**ரசிக மகாஜனங்கள் அதைக் கேட்டு,**

**நாடாளப் போட்டார்கள் ஓட்டு**”
என்று எம்.ஜி.ஆர். மற்றும் அவர் துவங்கிய இயக்கத்தாலும் தான், மக்களுக்கு நன்மை செய்ய முடியும் எனத் தீர்மானித்து அவரை முதலமைச்சராக்கி மக்கள் அழகு பார்த்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் தொலைநோக்குத் திட்டங்களால், தமிழ்நாட்டு மக்கள் இன்னும் பல நூறாண்டுகள் நற்பலன்களை அனுபவிப்பார்கள். எம்.ஜி.ஆர். என்ற பெயரே எங்களுக்கு மந்திரச் சொல்.

இம்மந்திரத்தின் துணை கொண்டே இன்னும் பல நூறாண்டுகள் அஇஅதிமுக தமிழ்நாட்டை ஆளும் என்று உறுதியாக தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டை ஆண்ட முப்பெரும் தலைவர்களின் ஆசியும், அருளும் இருந்த காரணத்தால்தான் அத்தகைய மகத்தான மக்கள் தலைவரின் நூற்றாண்டு விழாவை தலைமையேற்று, ஒரு வருட விழாவாக, சீரும் சிறப்புமாக கொண்டாடும் வாய்ப்பு, ஒரு சாதாரண கழகத் தொண்டனாகிய எனக்குக் கிடைத்தது.

இறைவனுடைய அருள் ஆசியோடும், என்னை இந்த நிலைக்கு உயர்த்திவிட்ட புரட்சித்தலைவி அம்மா என்ற தெய்வத்தினுடைய நல் ஆசியோடும், மற்றும் உங்கள் அனைவரது ஆதரவோடும் இந்த வாய்ப்பு எனக்கு கிடைத்தது என்றால் அது மிகையாகாது.

இத்தருணத்தில், பொது மக்கள் மற்றும் கழகத் தொண்டர்கள் அனைவருக்கும் நான் என்றென்றும் விசுவாசமாக இருப்பேன் என்று கூறிக்கொள்கிறேன்.

கழகத்தின் முப்பெரும் தலைவர்களும் ஒன்றாக சங்கமித்திருக்கும் வங்கக்கடல் ஓரம்தான் நான் வணங்கும் தெய்வத் திருக்கோயில்கள் இருக்குமிடம்.

ஆங்கிலேயர்களுக்குப் பிறகு, சுதந்திர இந்தியாவில் அதிக ஆண்டுகள் ஜார்ஜ் கோட்டையை ஆண்ட கட்சி அ.இ.அ.தி.மு.க. தான். இன்னும் பல நூறு ஆண்டுகள் தொடர்ந்து ஆளப்போவதும், அ.இ.அ.தி.மு.க. தான் என்பதை இந்த நேரத்தில் நான் உறுதியாகக் குறிப்பிடுகிறேன். அதற்குக் காரணம் தமிழ்நாட்டிலுள்ள **31** மாவட்டங்களிலும் மாண்புமிகு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டபோது மக்களின் எழுச்சியையும், மலர்ச்சியையும் கண்ணாறக் கண்டவன் நான்.

ஊருக்கு தம்பட்டம் அடிக்க, பேருக்கு விழா நடத்துபவர்கள் அல்லர் நாங்கள். நாங்கள் நடத்தும் ஒவ்வொரு விழாவையும் மக்கள் பணியை மையமாக வைத்தே நடத்தி வருகிறோம்.

பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாக்களின் மூலம் ஒரே வருடத்தில் 31 மாவட்டங்களுக்கும் சென்று, அங்கு வாழ்கின்ற மக்களின் வாழ்வாதாரத்திற்கு ஏற்றாற்போல் அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்து செயல்படுத்தியது மாண்புமிகு அம்மாவின் அரசு.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனி சிறப்புகளும், தனி அடையாளங்களும் இருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் பேசும் போதெல்லாம், அந்தந்த மாவட்டத்தின் மண்ணின் மைந்தனாகவே மாறி, அம்மாவட்டத்தின் பெருமை, அம்மாவட்டத்தில் பிறந்தும், வளர்ந்தும் சாதனை நிகழ்த்திய மகத்தான மனிதர்கள், அம்மாவட்டத்திற்கு மாண்புமிகு அம்மாவும், மாண்புமிகு அம்மாவின் அரசும் வழங்கிய திட்டங்கள் பற்றி புள்ளி விவரங்களோடு உரை ஆற்றியுள்ளேன்.

இதையெல்லாம் பொறுக்க முடியாதவர்கள், பல அவதூறுகளைப் பரப்பி, மாண்புமிகு புரட்சித் தலைவரின் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தையே நிறுத்த முயற்சி செய்தார்கள்.

அதிலும் அவர்கள் தோல்விதான் அடைந்தார்கள். எதிர்ப்புகளையெல்லாம் மீறி, இன்று சென்னையில் பிரமாண்டமாக நிறைவு விழா நடைபெறுவதை எண்ணி நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் நான் நேரில் பார்த்ததையும், கேட்டு அறிந்ததையும், திட்டங்களை அறிவித்தும், முடிவடைந்த திட்டங்களை துவக்கி வைத்தும் மகிழ்ந்ததையும் இந்த நிறைவு விழாவில் உங்களோடு பகிர்ந்து கொள்வதில் பெருமைப்படுகின்றேன். மதுரையில் தொடங்கி கன்னியாகுமரி வரையிலான 31 மாவட்டங்களுக்கும் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா மூலம் பெற்ற திட்டங்களின் மதிப்பு எவ்வளவு தெரியுமா ?

10 ஆயிரத்து 884 கோடியே 42 லட்சம் ரூபாய் செலவில், 5 ஆயிரத்து 571 திட்டங்கள் என்பதை இவ்விழாவிலே தெரிவிப்பதில் அளவில்லா மகிழ்ச்சியடைகிறேன்.

இதில் மொத்தம் அறிவிக்கப்பட்ட 547 அறிவிப்புகளில், 434 அறிவிப்புகளுக்கு குறுகிய காலத்தியே அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன,

அவற்றில் 391 அறிவிப்புகளுக்கான திட்டப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றும், 43 அறிவிப்புகளுக்கான திட்டங்கள் முழுமையான நிறைவேற்றப்பட்டும் உள்ளன.

மீதமுள்ள அறிவிப்புகளில், 84 அறிவிப்புகளுக்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 29 அறிவிப்புகள் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதை எதற்காக சொல்கிறேன் என்று சொன்னால், இன்றைக்கு எதிர்க்கட்சி தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இது ஆடம்பர விழாவாக நடக்கிறது என்று குறிப்பிட்டார். நாம் எவ்வளவு திட்டங்களை அறிவித்திருக்கின்றோம். ஒவ்வொரு மாவட்டத்திற்குச் செல்கின்றபொழுது பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாடுவது மட்டுமல்ல, நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகின்ற அந்த நிகழ்ச்சியிலே, அங்கிருக்கின்ற மாவட்ட மக்களுக்கு எத்தனை திட்டங்கள் அறிவித்திருக்கின்றோம், அத்தனை திட்டங்களும் அம்மாவினுடைய அரசால் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விழைகின்றேன். இந்த அரசு மக்களுடைய அரசு, மக்களுக்காக பாடுபடுகின்ற அரசு. ஆகவேதான் அறிவிக்கப்பட்ட அத்தனை திட்டங்களையும் இன்றைக்கு நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். இது ஆடம்பர விழா அல்ல, மக்களுக்கு நன்மை பயக்கின்ற நூற்றாண்டு விழா என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவராகவும், எதிர்க்கட்சியினுடைய தலைவராகவும் இருக்கின்ற திரு.ஸ்டாலின் அவர்கள் எப்பொழுது பார்த்தாலும் நம்முடைய இயக்கத்தைப் பற்றியும், நம்முடைய அரசைப் பற்றியும் வாடிக்கையாக குறை சொல்லிக் கொண்டிருக்கிறார். அவர் உண்மையைச் சொன்னால் பரவாயில்லை, அவர் வாய் திறக்கின்றபோதெல்லாம் பொய்யாகத்தான் வாய் திறக்கின்றார், பொய்யாகத்தான் கூறுகின்றார். அதேபோல, பேட்டி எடுக்க நம்முடைய நிருபர் சென்றால் அவர் சொல்வது அத்தனையுமே பொய்யாகத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார். ஏனென்று சொன்னால் இந்த ஆட்சியில் எதுவும் நடைபெறவில்லை என்று அவ்வப்போது சொல்லிக் கொண்டிருக்கிறார். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றபொழுது என்னென்ன திட்டங்களை நாட்டு மக்களுக்குச் செய்தார்கள் என்பதை விவரமாக எடுத்துச் சொன்னோம். அதேபோல், இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மறைவிற்குப் பிறகு, அம்மாவினுடைய அரசு பொறுப்பேற்ற பிறகு ஒரு வருடம் 7 மாத காலத்திலே என்னென்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது, என்னென்ன திட்டங்களை தமிழகத்திலே கொண்டு வந்தோம் என்பதையும் புள்ளிவிவரத்தோடு சொல்லியிருக்கின்றோம். இன்னும் என்ன சொல்லவேண்டும்? என்ன அவர் எதிர்பார்க்கின்றார். அவருடைய ஆட்சியிலே என்ன திட்டத்தை கொண்டு வந்தார்? தமிழ்நாட்டு மக்களுக்கு. அதனால் மக்கள் என்ன நன்மைகள் பெற்றார்கள்? எதுவுமேயில்லை. துன்பங்களைத்தான் பெற்றார்கள். எனக்கு முன்னால் மீன்வளத் துறை அமைச்சர் மிக அழகாகக் குறிப்பிட்டார், எதிர்க்கட்சியாக இருக்கின்றபொழுதே நாட்டு மக்களை எப்படி படாதபாடு படுத்தினார்கள் என்ற விளக்கத்தைச் சொன்னார்.

ஹோட்டலிலே சாப்பிட்டுவிட்டு பணம் கொடுக்காமல் அந்த முதலாளியை எப்படி அடித்துத் துவைத்தார்கள் என்று நாட்டு மக்கள் அத்தனைபேருக்கும் தெரியும். ஒரு அழகு நிலையத்திற்குச் சென்று திமுக கட்சியைச் சேர்ந்த முன்னாள் ஊராட்சிக் குழு உறுப்பினர், அந்தப் பெண்மணியை எப்படி அடித்து, உதைத்து, காலால் மிதித்தார் என்று ஊடகத்தின் வாயிலாக நாட்டு மக்கள் அத்தனைபேரும் தெரிந்து கொண்டார்கள். மகளிருக்கு வக்காலத்து வாங்கி பேசுவதைப்போல பல பத்திரிகைகளிலே செய்தி வெளியிட்டார். அது என்னவென்று உங்களுக்குத் தெரியும். ஆகவே, அவருடைய கட்சியைச் சேர்ந்தவர் அழகு நிலையத்தில் புகுந்து இப்படி ஒரு தகாத செயலில் ஈடுபட்டிருக்கின்றார், ஏதாவது கண்டித்தாரா ? இதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்தாரா ? ஆகவே, அப்படிப்பட்ட கட்சிதான் திமுக கட்சி என்று இந்த நாட்டு மக்கள் அறிந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நினைவுகூற விரும்புகிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையில் சட்டம்—ஒழுங்கு சிறப்பாக இருந்து கொண்டிருக்கிறது. சட்டத்தின் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றபொழுது சட்டம்—ஒழுங்கு எப்படி சிறப்பாக இருந்ததோ, அதேபோலத்தான் அம்மாவினுடைய ஆட்சியிலும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இன்று சென்னை மாநகரில் நடைபெறும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவின் நிறைவு நாளில் சென்னை நகரின் வளர்ச்சிக்கு மட்டும் மாண்புமிகு அம்மாவின் அரசு 18 கோடியே 79 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான திட்டங்களை வழங்கியிருக்கிறது என்று கூறிக் கொள்கிறேன்.

இந்த நூற்றாண்டு விழாக்களின் மூலம் திட்டங்கள் மட்டும் கிடைக்கவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவரின் உழைப்பையும், வளர்ச்சியையும், இந்தத் தலைமுறையினரும் நன்கு புரிந்து கொண்டார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவரின் வாழ்க்கையை பாடமாகக் கொண்டு முன்னேறத் துடிக்கிறார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தனிக்கட்சி தொடங்கியபோது, தன்னுடைய தலைவரும் வழிகாட்டியுமான பேரறிஞர் அண்ணா அவர்களின் உருவப் படத்தை தன் கட்சிக்கொடியில் வடிவமைத்து, அண்ணாவின் பேரும் புகழும் தமிழ் மண்ணில் காலம் காலமாக நிலைத்து நிற்க வழி வகுத்தார்கள்.

பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் மறைந்து 30 ஆண்டுகள் ஆனாலும், மக்கள் மனதில் இன்றும் பசுமையாக இருப்பதற்குக் காரணம், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்தான். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் விட்டுச் சென்ற மக்கள் பணிகள் அனைத்தையும் நிறைவேற்றியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

புரட்சித்தலைவி அம்மா அவர்களின் புகழ் காலம் உள்ள வரை நிலைக்கும் அளவிற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு திட்டங்களை மக்களுக்கு வழங்கி வருவதை தமிழ்நாட்டு மக்கள் அறிவீர்கள்.

‘‘**நாட்டுக்காக உழைப்பதற்கே அண்ணா பிறந்தார்.**
**பொது நலத்தில் தானே நாள் முழுக்க கண்ணாயிருந்தார்.**
**ஏற்றுக் கொண்ட பதவிக்கெல்லாம் பெருமையைத் தந்தார்.**
**தன் இனிய குடும்பம் ஒன்றுக்குத்தான்**
**வறுமையைத் தந்தார்**’’
என்று நேற்று, இன்று, நாளை என்ற படத்தின் வாயிலாக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அண்ணாவைப் பற்றி மிகவும் கவலைப்பட்டார்.

கட்சியில் அடிமட்டத் தொண்டனுக்கும் தலைவர் பதவி வழங்கும் ஜனநாயகக் கட்சி ஒன்று உண்டு என்றால், அது அ.இ.அ.தி.மு.க. மட்டும்தான். அதற்கு உதாரணமாகத்தான், ஒரு விவசாய குடும்பத்தில் பிறந்த நான் இன்று உங்கள் கண்முன்னே முதலமைச்சராக நிற்கின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் அரசின் துடிப்பான செயல்பாடுகளின் காரணமாக, வேளாண் உற்பத்திக்கு கடந்த 7 ஆண்டுகளில் 5 விருதுகளும், மக்கள் நல்வாழ்வு மற்றும் சுகாதாரத் துறைக்கு 19 விருதுகளும், தேசிய விருதுகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு 6 விருதுகளும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் எரிசக்தித் துறைக்கு தலா 3 விருதுகளும் மற்றும் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை போன்ற பல துறைகளுக்கும் சர்வதேச விருதுகள் மட்டுமன்றி, மத்திய அரசின் தேசிய விருதுகளையும் வாங்கியுள்ளன. அதுமட்டுமல்ல, மின்துறை, போக்குவரத்துத் துறை, இப்படி பல துறைகளில் இன்றைக்கு அகில இந்திய அளவிலே விருதுகளை பெற்ற அரசு அம்மாவுடைய அரசு.

பெங்களூரைச் சேர்ந்த ஒரு அமைப்பு, சமூக, பொருளாதாரம், சட்டம் ஒழுங்கு உட்பட முக்கியமான 10 அடிப்படை காரணிகளைக் கொண்டு, அரசின் செயல்பாடுகளை மதிப்பீடு செய்து வெளியிட்ட அறிக்கையில், சிறந்த ஆளுமைக்கான இரண்டாவது மாநிலமாக தமிழ்நாட்டை தேர்வு செய்துள்ளது என்பதை எதிர்க்கட்சி தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வரசின் செயல்பாட்டில் குறை சொல்லும் எதிர்க்கட்சியினர் இதற்கு என்ன பதில் சொல்வார்கள்? செயல்படாத அரசாக இருந்தால், விருதுகளை வெல்ல முடியுமா ? என்று எண்ணி பார்க்க வேண்டும்.

இந்த தலைமுறை மக்களாகிய நாம், நமக்குப் பின் வரும் தலைமுறையினருக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைப் பற்றிய உயர்ந்த எண்ணங்களையும், கருத்துகளையும் கூற வேண்டும்.

‘**அறிவூட்டும் தந்தை,**
**நல்வழி காட்டும் தலைவன்**’ என்ற
பாடலுக்கேற்றவாறு, புரட்சித் தலைவர் வழி வந்த தலைவர்களையே மக்கள் தங்கள் தலைவனாக ஏற்றுக் கொள்வார்கள்.

‘**மாபெரும் சபைதனில் நீ நடந்தால்,**
**உனக்கு மாலைகள் விழ வேண்டும்.**
**ஒரு மாற்று குறையாத மன்னவன் இவன்**
**என்று போற்றிப் புகழ வேண்டும்**’
என்ற புரட்சித் தலைவரின் பாடல் வரிகளை இளைஞர்களிடம் கொண்டு சென்றால், தமிழ்நாடு எதிர்காலத்தில் நல்ல தலைவர்களைப் பெறும்.

ஏழைகளுக்கு அன்னதானம் செய்வதற்கென்றே, வடலூர் வள்ளலார் அவர்கள் அணையா அடுப்பினை ஏற்றிவைத்தார். அதற்குப் பிறகு ஒரு அணையா அடுப்பு எரிந்தது என்றால், அது ஏழை, எளிய மக்களுக்காகவும், தொண்டர்களுக்காகவும், ஏற்படுத்தப்பட்ட ராமாவரம் தோட்ட அணையா அடுப்பு தான்.

அத்தகைய புரட்சித் தலைவரின் வள்ளல் குணத்தைப் பார்த்த பின்பு தான் பலரும் அதை பின்பற்ற ஆரம்பித்தனர். இதைக் கூறும்போது எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

ஒரு ஊரில் வாழ்ந்த ஒரு பெரிய மனிதருக்கு
செல்வ செழிப்பு தந்த கர்வம் அதிகம்.
அவரிடம் ஏராளமான பணம் இருந்தது.
ஆனால் மன நிறைவு இல்லை.

அவர் தனது ஊருக்கு ஒரு துறவி
வந்திருப்பதாகவும், அவர் தன்னை
பார்க்க வருபவர்களுக்கு மன அமைதிக்கு
நல்ல ஆலோசனைகள் வழங்குவதாகவும்
அறிந்த செல்வந்தர், அலட்சியமாக
அந்த துறவி தங்கியிருந்த
வீட்டிற்குள் வேகமாக நுழைந்தார்.

அங்கே அந்த துறவி தனது வேலையில் மூழ்கி இருந்தார்.
சற்று நேரத்தில் தலை நிமிர்ந்த அந்த துறவி,
வந்த செல்வந்தர் பற்றிய அனைத்து

விவரங்களையும் கூறினார்.

**“இது எல்லாம் எப்படி உங்களுக்கு தெரியும்,
யார் சொன்னார்கள்” என அந்த செல்வந்தர் கேட்டார்.**

அந்த பெரிய மனிதரைப் பார்த்த துறவி,
**“போனதெல்லாம் போகட்டும், கடவுள் உங்களுக்கு அளித்துள்ள பெரும் செல்வம், ஏதுமற்ற லட்சக்கணக்கான மக்களுக்கு நல்லது செய்யவே கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, மற்றவர்களுக்கு கொடுக்க பழகுங்கள்”** என்றார்.
**“எனக்கு புத்திமதி சொல்ல இவர் யார்”** என்று மனதில் நினைத்த அந்த செல்வந்தர் கோபமாக வெளியேறினார்.

ஆனால் ஒரு வாரத்திற்கு பிறகு,
மீண்டும் அங்கே வந்த அந்த செல்வந்தர்,
பொதுநலத் தொண்டு ஒன்றிற்காக அவர் வழங்கிய
தொகை பற்றிய ஆவணங்களைக் காட்டி,

**“என்ன திருப்திதானே ? இப்போது எனக்கு நீங்கள்
நன்றி சொல்லலாம்”** என்றார்.

உடனே துறவி,
**“நன்றி சொல்ல வேண்டியது நானல்ல,
நீங்கள்தான்”** என்றார் அமைதியாக.

துறவி ஏன் அவ்வாறு கூறினார் என்பது
அந்த பெரிய மனிதருக்கு புரியவில்லை.
எனினும் துறவியின் வார்த்தைகள்
அவரை சிந்திக்க வைத்தன.

அப்போது தான், தான் துறவியின் சொல்படி
வறுமையில் வாடுபவர்களுக்கு
தானம் வழங்கும் போது, அவர்கள்
தன்னை வாழ்த்தியதையும்,
அது அவருக்கு மன நிறைவை அளித்ததையும்
அவர் உணர்ந்தார்.

அன்றிலிருந்து அவர் மாறினார்.
அவரது திரண்ட செல்வத்தை,
வாழ்க்கையில் துன்பப்படும் அனைவருக்கும்
வாரி வாரி வழங்க தொடங்கினார்.

செல்வந்தராகிய அந்த பெரிய மனிதரை
வள்ளலாக மாற்றிய துறவி
**– சுவாமி விவேகானந்தர்.**

வள்ளலாக மாறிய செல்வந்தர்
**– ஜான் டி. ராக்ஃபெல்லர்**
என்ற அமெரிக்க தொழில் அதிபர்.

**ராக்ஃபெல்லர்** தனது **33**வது வயதிலேயே
பெரும் தொழில் அதிபராக மதிக்கப்பட்டார்;
**அவருக்கு தெரிந்ததெல்லாம் தொழில், போட்டி,**
**வெற்றி, பணம் ஆகியவை மட்டுமே.**

அவரது சுக துக்கங்களை பங்கிட்டுக் கொள்ள
உறவினர்களோ, நண்பர்களோ யாரும் இல்லை.
அதன் விளைவு மன அழுத்தம், கவலை,
பயம் யாவும் ஒன்று சேர்ந்து
அவரின் உடல் நிலையை கடுமையாக பாதித்தன.

அப்போது ராக்ஃபெல்லருக்கு வயது **53.**
இந்த சூழ்நிலையில் தான் அவர் சிகாகோ நகரில்
சுவாமி விவேகானந்தர் அவர்களை சந்தித்தார்;
இந்த சந்திப்புதான் அவர் வாழ்க்கையில்
**தானம் செய்வது,**
**அவ்வளவு எளிதான காரியமாக அமையவில்லை.**
அவர் கொடுத்ததை பலரும் வாங்க மறுத்தனர்.

இருந்தாலும் அவர் சலிக்காமல் நன்கொடை
கொடுத்துக் கொண்டே இருந்தார்.

மேலும் இவரது பொருள் உதவியினால்,
உலகெங்கும் உள்ள மக்கள் நலனுக்காக
அறிவியல் ஆராய்ச்சிகள், மருத்துவ சேவைகள்,
பல வியாதிகளுக்கான மருந்துகள் கண்டுபிடித்தல்
போன்ற ஏராளமான பணிகள் நடைபெற்றன.

கருணை உள்ளம் கொண்ட மாமனிதர்
என்ற நிலைக்கு மாறிய **ராக்ஃபெல்லருக்கு**
கிடைத்தது என்ன **?**

**அமைதி, ஆனந்தம், ஆரோக்கியம்!**

எனவே, செல்வம் இருப்பவர்கள், இல்லாதவர்களுக்கு கொடுத்து உதவுங்கள். கல்வி அறிவு உள்ளவர்கள், இல்லாதவர்களுக்கு அறிவு புகட்டுங்கள். உள்ளத்தில் அன்புள்ள அனைவரும் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைப் போல், பிறருக்கு எந்த வகையிலாவது இயன்ற சேவைகளை செய்து கொண்டே இருக்க வேண்டும்.

இதே எண்ணத்தில்தான், மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து பணியாற்றி வருகிறது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்களின் சென்னை மாவட்டத்திற்கான புதிய அறிவிப்புகள்**

**<u>வடசென்னை மேம்பாட்டுத் திட்டம்</u>**

1) பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் எண். 1 முதல் 5 வரை உள்ள பகுதிகளில் வசித்து வரும் வடசென்னை மக்களின் கோரிக்கைகளை ஏற்று, அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக ஒரு சிறப்புத் திட்டத்தை உருவாக்குவது பற்றி பரிசீலித்து அறிக்கை அளிக்க மாண்புமிகு அம்மாவின் அரசு ஒரு நிறுவனத்தை அமர்த்தியது. அந்நிறுவனம் ஓர் திட்ட அறிக்கையை தயாரித்து தமிழ்நாடு அரசுக்கு வழங்கியுள்ளது.

அதன்படி, மீன்பிடிபடகு தயாரித்தல், மீன்பிடி படகு பழுதுபார்க்கும் தளம், படகுத்துறை மேம்பாடு, கல்வி மேம்பாட்டு பணிகள், அடிப்படைக் கட்டமைப்புகள் உருவாக்குதல், நலவாழ்வுத் திட்டங்களுக்கான கட்டமைப்புகளை மேம்படுத்துதல், வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல், தொழிற்பயிற்சி வழங்குதல், குடியிருப்புகளை மேம்படுத்துதல், விளையாட்டு மேம்பாடு உள்ளிட்ட திட்டங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. அந்த அறிக்கையை விரைந்து பரிசீலித்து மாண்புமிகு அம்மாவின் அரசு தக்க மேல் நடவடிக்கை எடுக்கும்.

**<u>வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை</u>**

2) நகரப் பகுதிகளில் வீடுகளின் விலைகள் தொடர்ந்து அதிகரித்து வருவதை தொடர்ந்து, தமிழ்நாடு முழுவதும் நகரங்களில் குறிப்பாக, சென்னையில் வாழும் மக்களின் கோரிக்கைகளை ஏற்று, **மாண்புமிகு அம்மாவின் அரசு அனைத்துத் தரப்பினருக்கும் இலவசமாக அனுமதிக்கப்படும் தளப் பரப்பளவு**

**குறியீட்டை (FSI) தற்போதுள்ள 1.5–லிருந்து 0.5 உயர்த்தி, 2.0 ஆக மாற்றியமைக்கப்படும்.**

அதே போல் ஊக்க தளப் பரப்பளவு குறியீடும் (Premium FSI) உயர்த்தப்படும். கட்டட விதிமுறைகளில் இதற்கான மாற்றங்கள் செய்து 1.10.2018 முதல் இந்த மாற்றங்கள் நடைமுறைக்கு வரும்.

இதன் மூலம் அனைவருக்கும் வீடு என்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் தொலைநோக்குப் பார்வை 2023–ன் இலக்கை அடைய முடியும்.

<u>சென்னைக்கு புதிய பன்னாட்டு விமான நிலையம்</u>

3) சென்னையின் தொழில் வளர்ச்சி, அதிகரித்து வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகை மற்றும் மக்களின் வாழ்க்கை தரம் உயர்வின் காரணமாக தற்போதுள்ள சென்னை விமான நிலையம் வருகின்ற 2024ஆம் ஆண்டில் பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்து ஆகியவற்றை கையாள்வதில் முழு நிறைவை அடைந்து விடும் என்பதால், புதிய விமான நிலையம் அமைக்க வேண்டியது அவசியமாகிறது என்பதை உணர்ந்த மாண்புமிகு அம்மாவின் அரசு சென்னைக்கு அருகில் உலகத் தரம் வாய்ந்த புதிய பன்னாட்டு விமான நிலையம் ஒன்றை அமைக்கும்.

<u>பொதுப் பணித் துறை</u>

4) தமிழ்நாட்டில் உள்ள நீர்வள ஆதாரங்களை மேலும் செம்மைப்படுத்த, பன்னாட்டு நிதி நிறுவனங்களின் உதவி பெற்று பாசனம் மற்றும் குடிநீர் திட்டங்களை தயாரித்து, செயல்படுத்தும் வகையில் தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தைப் போன்று, தமிழ்நாடு நீர்வள ஆதாரங்களை பாதுகாத்தல் மற்றும் நதிகளை சீரமைக்கும் பணிகளை செயல்படுத்துவதற்கு ஏதுவாக "**தமிழ்நாடு நீர்வள ஆதாரங்களை பாதுகாத்தல் மற்றும் நதிகளை சீரமைத்தல் கழகம்**" என்ற ஒரு அமைப்பு ஏற்படுத்தப்படும். இந்தக் கழகம் செயல்பட ஏதுவாக **முதன்மைச் செயலாளர் நிலையில் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் உடனடியாக நியமிக்கப்படுவார்.**

<u>வேளாண்மைத் துறை –</u>
<u>"மாண்புமிகு முதலமைச்சரின் கிராமப்புற வீட்டுக் காய்கறி உற்பத்தித் திட்டம்"</u>

5) தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் வசிக்கும் மக்கள் மற்றும் விவசாயிகள் தங்கள் வீடு அல்லது தங்கள் நிலத்தின் ஒரு பகுதியில் காய்கறிகள் உற்பத்தி செய்வதை ஊக்கப்படுத்தும் வகையில், ஒரு புதிய முன்னோடித் திட்டமாக **"மாண்புமிகு முதலமைச்சரின் வீட்டுக் காய்கறி உற்பத்தித் திட்டம்"** இந்த நிதியாண்டில் கிராமப்புறங்களில் தொடங்கப்படும்.

<u>எரிசக்தி துறை</u>

6) சிங்கபெருமாள்கோவில் மற்றும் வீராபுரம் ஆகிய 230 கி.வோ துணை மின் நிலையங்களின் மின் சுமையை குறைப்பதற்காகவும், மாம்பாக்கம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளின் பெருகிவரும் மின் தேவையை ஈடு செய்யவும், மாம்பாக்கத்தில் 230 கி.வோ துணை மின் நிலையம் 137 கோடியே 37 லட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்படும்.

7) வியாசர்பாடி, குக்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம் நீரேற்று நிலையம் ஆகிய துணை மின் நிலையங்களின் மின் சுமையை குறைக்கும் வகையில், மதுரவாயல், எழும்பூர், பி & சி மில் மற்றும் ஐ.சி.எப் ஆகிய நான்கு இடங்களில் உள்ள 33 கி.வோ துணை மின் நிலையங்கள் அந்தந்த இடங்களிலேயே 203 கோடியே 48 லட்சம் ரூபாய் செலவில் 110 கி.வோ **வளிம காப்பு துணை மின் நிலையங்களாக** தரம் உயர்த்தப்படும்.

<u>**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை**</u>

8) தென்சென்னை புறநகர் பகுதியில் வசிக்கும் ஏழை எளிய மக்களின் நலன் கருதி, பள்ளிக்கரணை பகுதியில் தேசிய நலவாழ்வுக் குழும நிதியில் 100 படுக்கைகள் கொண்ட <u>**பள்ளிக்கரணையில் புறநகர் மருத்துவமனை**</u> ஒன்று சுமார் 31 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

9) கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு, 12 அறுவை அரங்கங்கள் மற்றும் 260 படுக்கை வசதி கொண்ட அடித்தளம் மற்றும் 6 தளங்கள் கொண்ட புதிய கட்டடம், சிறுநீரக அறுவை சிகிச்சைப் பிரிவு, மகப்பேறு பிரிவு, சிறுநீரகவியல் பிரிவு, இரத்தம் சுத்திகரிப்புப் பிரிவு, பொது மருத்துவம், உடனடி சிகிச்சைப் பிரிவு மற்றும் இமேஜிங் பிரிவு ஆகிய பிரிவுகளுடன் கூடிய ஒரு அலகு 141 கோடியே 42 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

10) மேலும் இம்மருத்துவமனைக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன், சி.டி.ஸ்கேன், சி.ஆர்.எம். ஊடுகதிர் அலகு, செயற்கை சுவாச கருவிகள் (Ventilators), அல்ட்ரா சவுண்டு கருவி போன்ற மருத்துவக் கருவிகள் 134 கோடியே 18 லட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

<u>**நெடுஞ்சாலைகள் (ம) சிறுதுறைமுகங்கள் துறை**</u>

11) சென்னை புறநகர் பகுதியில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் விதத்தில் **முக்கிய சாலை கட்டமைப்பு திட்டத்தின் கீழ்** 216 கோடி ரூபாய் மதிப்பில் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு செயலாக்கத்தில் உள்ளன. இதன்

தொடர்ச்சியாக தற்போது 45.15.கி.மீ. நீள முக்கிய சாலைகளை அகலப்படுத்தி மேம்பாடு செய்யும் பணிகள் 344 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

12) விரிவாக்கப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி பகுதியில் இரண்டு கட்டங்களாக 400 கோடி ரூபாய் மதிப்பில் எடுத்துக்கொள்ளப்பட்ட சாலை விரிவாக்கப் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன. மூன்றாம் கட்டமாக விரிவுப்படுத்தப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் 125 கோடியே 87 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சாலை கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்படும்.

13) தாம்பரம் கிழக்கு புறவழிச்சாலை (கட்டம் – II) 33 கோடியே 35 லட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்படும்.

14) மவுண்ட் – பூந்தமல்லி ஆவடி சாலையில் ஆவடி அருகே 12கோடி ரூபாய் மதிப்பில் இரயில்வே மேம்பாலம் அகலப்படுத்தப்படும்.

15) தில்லை கங்கா நகரில் உள்ள இரயில்வே கீழ்ப் பாலத்திற்குக் கூடுதலாக மேம்பாலம் கட்டும் பணிக்கான விரிவான திட்ட அறிக்கை 50 லட்சத்து 59 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு வருகிறது.

16) சென்னை அடையாறு பகுதியில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் பொருட்டு சர்தார் பட்டேல் சாலையில் மத்திய கைலாஷ் பகுதியில் சாலை மேம்பாலம் கட்ட, 37 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

17) சென்னை திருத்தணி ரேணிகுண்டா சாலையில் கி.மீ.75/6ல் இரயில்வே மேம்பாலம் அமைக்க 48 லட்சம் ரூபாய் மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

18) சென்னை உள்வட்டச் சாலையில் உள்ள கேந்திரிய வித்யாலயா பள்ளி அருகில் நடை மேம்பாலம் அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை 10 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பில் தயாரிக்கப்பட்டு வருகிறது.

<u>**ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத்துறை**</u>

19) இராயபுரம், தொழிற்கல்வி பயிலும் மகளிர் விடுதிக் கட்டடம் பழுதடைந்த நிலையில் உள்ளதால், அக்கட்டடத்தினை இடித்துவிட்டு, அந்த இடத்திலேயே **3 கோடியே 72 லட்சம் ரூபாய் மதிப்பில் இரண்டு மாணவியர் விடுதிகள்** கட்டப்படும்.

20. மாண்புமிகு பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் இல்லமான ராமாவரம் தோட்டம் அமைந்துள்ள சுமார் 20.8 கிலோ மீட்டர் நீளமுள்ள மவுண்ட்–பூந்தமல்லி–ஆவடி நெடுஞ்சாலை, தலைவர் அவர்களது நினைவினைப் போற்றும் வகையில்,

**புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நெடுஞ்சாலை என்று பெயர் சூட்டப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

21. ஆசியாவிலேயே மிகப்பெரிய பேருந்து நிலையமாக விளங்கும் கோயம்பேடு பேருந்து நிலையம் 102 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு, 2002 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் துவக்கி வைக்கப்பட்டது. இப்பேருந்து நிலையத்திற்கு நாள் ஒன்றுக்கு 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட பயணிகள் வந்து செல்கிறார்கள். ஆகவே, இந்த கோயம்பேடு பேருந்து நிலையத்திற்கு பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய திருப்பெயரான,

**புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையம் என்று பெயர் சூட்டப்படுகிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.**

கடந்த 30.6.2017ல் மதுரையில் தொடங்கிய விழா இன்று வெற்றிகரமாக நிறைவு பெற்றிருக்கிறது என்றால் அந்த வெற்றியில் பங்கு வகித்த மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பன்னீர்செல்வம் அவர்களுக்கும், மாண்புமிகு அண்ணன் பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்களவை துணை சபாநாயகர் அவர்களுக்கும், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மரியாதைக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், முன்னாள் அமைச்சர் பெருமக்களுக்கும், இந்த நிகழ்ச்சியிலே தவறாமல் பங்குபெற்ற தலைமைக் கழக நிர்வாகிகளுக்கும், கட்சி நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும் ,

எனது அலுவலகத்தில் பணியாற்றும் அரசு செலாளர்களுக்கும், அரசு உயர் அலுவலர்களுக்கும், செய்தி மக்கள் தொடர்புத் துறையினருக்கும், சிறு அசம்பாவிதம் கூட ஏற்படாமல் திறமையாக செயலாற்றிய காவல் துறையினருக்கும், நம்முடைய நூற்றாண்டு விழாவில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் ஊடகத்தின் வாயிலாக, பத்திரிகையின் வாயிலாக மக்களுக்கு சென்றடையக்கூடிய பணியில் ஈடுபட்டிருக்கின்ற ஊடக நண்பர்களுக்கும், பத்திரிகை நண்பர்களுக்கும், எல்லாவற்றிற்கும் மேலாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பெருந்திரளாக வருகைதந்த பெரியோர்களுக்கும், தாய்மார்களுக்கும், இளைஞர்களுக்கும் அனைவருக்கும் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. 31 மாவட்டங்களிலும் பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடைய நூற்றாண்டு விழா கொண்டாடினோம். இந்த விழா சீரோடும், சிறப்போடும் நடைபெறுவதற்கு காரணமாக இருந்த அமைச்சர் பெருமக்களுக்கும், அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் பெருமக்களுக்கும், அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கும், அவரோடு பணியாற்றிய அரசு அலுவலர்களுக்கும், 32 மாவட்டங்களிலும் இந்த நிகழ்ச்சியை சீரோடும், சிறப்போடும் வெற்றி பெறுவதற்கு உதவியாக இருந்த கழக கண்மணிகளுக்கும், கழக நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும், பொதுமக்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

வாழ்க அண்ணா நாமம்!
வாழ்க புரட்சித்தலைவரின் புகழ்!
தொடர்க புரட்சித்தலைவி அம்மாவின் ஆட்சி!

என்று சொல்லி,

எம்.ஜி.ஆர்.நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு, தமிழகம் முழுவதிலும் வந்திருக்கின்ற அத்தனை தொண்டர்களும், நிர்வாகிகளும் பத்திரமாக வாகனங்களில் வீடு செல்ல வேண்டும் என்று அன்போடு கேட்டு விடைபெறுகின்றேன்.
நன்றி

வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**